About 1 min. and 16 sec. ↑

B. அடே இருந்தாளே அங்கெ
இரண்டு பெண்ணெ நல்ல ரண்டு பெண்ணெ
A. அங்கெ தாவி பத்தினி
மயிர் புடிச்சா எங்காத்தா மயிர் புடிச்சா
B. அடா மயிர் பிடிச்சா நல்ல மயிர் பிடிச்சா
A. அங்கெ தனிச்சிருந்தா பகெவரியா
ரெண்டு பேரை அங்கு ரெண்டு பேரை
B. அவ தாண்டி நல்ல தாண்டி நல்ல
மயிர் பிடிச்சா நல்ல மயிர் பிடிச்சா
A. ஏ அன்னக்கொடி அங்கெ விளர் மாது
B. அவ தனிச்சிருந்தா அங்கெ
இரண்டு பெண்ணெ நல்ல ரண்டு பெண்ணெ /

A. ஐயரு ஓடியாந்ததும்
B. ஆ.
A. "ஆத்தா, ஈஸ்வரி!
B. ஆ.
A. இப்ப, எதுக்காக நீங்க இருக்கறீங்க?"
B. ஆ.
A. "டேய்! பேசுறது ஒரு பல்லிருக்காது பாப்பே. (பாப்பான்)
B. ஆ.
A. என்னடா சொன்னெ நானு!" "ஆத்தா!
B. ஆ.
A. இன்ன அதெல்லா வயிசுக்கு வராமல். வயிசுக்கு வந்த
காலத்திலெ
B. ஆ.

A. நாங்க ஒன்னைப் போலெ ரண்டுபேரெ, ரண்டை வென்று
செய்துக்கிட்டுப் போங்க ராஜாவென்று"

B. ஆ.

A. சொல்லுறாரையரங்கே...

B. ஐயரங்கே...

A. "அதாவது பெசீட்டயா

B. ஆ.

A. உன்னுடைய உயிரு உன்னிடத்திலிருக்காது.
கொடலெப் புடுங்கிப் போடுவெ."

B. ஆ.

A. அப்படீன்னு ரண்டையும் புடுச்சிருந்து

B. ஆ.

A. பருவதியா

B. ஆ.

A. வெளிமுகம் வந்து,

B. ஆ.

A. பிள்ளையார் கோயிலுக்கு

B. ஆ.

A. கொண்டு வந்தா பத்தினியா...

B. பத்தினியா...

A. "அடே, கருப்புத்தையாரு!"

B. ஆ.

A. "சாமி" "வாடா, இங்கை!

B. ஆ.

A. போய் சீக்கிர அந்தக் கொத்தர் ரண்டுபேரையுங் கூட்டுவா."

B. ஆ.

A. கருப்புத்தையாரு அவ

B. ஆ.

A· ரண்டு கொத்தரையாங் கூட்டிக் கொண்டுவர
"அப்பா, கொத்தரே!"

B· ஆ.

A· தெய்வசபையிலிருந்து வந்த கதங்களை காவல் வெச்சிருந்த பகவதியா,

B· ஆ.

A· தெய்வசபையை நினைச்சு மேலை போகச்சொல்லிப்போட்டு

B· ஆ.

A· "அப்பா, அந்தக் கல்லையெடுத்துக் கீழை போவெங்க."

B· ஆ.

A· அப்படியே போட்டானே...

B· போட்டானே...

A· "ஆகா, அகிலாண்ட கோடி! பிரமாண்ட நாயகா! சங்குச் சக்கர வைகுந்த வாசகா!

B· ஆ.

A· நான் தேடும்

B· ஆ.

A· குழந்தை வந்த காலத்திலே

B· ஆ.

A· இரண்டு பெண்ணையும் நான், நான் எப்பழு அந்தக் காலத்திலை எம்பெருமான் மாயவர் என்னை மணம் செய்தாரோ,

B· ஆ.

A· அப்படியே என்னுடைய குழந்தைக்கு நா யானை முகப்புள்ளையார் கோயில்லை செய்து வைக்கிறே.

B· ஆ.

A· அதனாலே

B· ஆ.

A· என்னுடைய வாரிசு ரெண்டையும் கொண்டு வந்து விட்டேன்.

B· ஆ.

A· வாசுதேவா! வரணதேவா!

B· ஆ.

A· என்னுட பாலமலைச் சோதியா பரமசிவ நன்றுசி...

B· தீன்றுசி--

A· இந்தப் பெண் சிறுமியரண்டுங் கல்லுச் சிலையாககோனுங்
காஞ்சிநாதா... "
{
B· காஞ்சிநாதா...

A· அப்பழயே உருவம்மாதிரி, அப்பழயே கண்முழ

B· ஆ.

A· முழிச்சது போலை

B· ஆ.

A· கல்லுச்சிலையாக

B· ஆ.

A· மாயவனுடைய கிருபையினாலே அப்படியே
நின்றுதங்கை...

B· நின்றுதங்கை...

A· ஆராலும் போட்டு உனனம் பண்ணிப் போகவாங்கன்று

B· ஆ.

A· பருவதியா,

B· ஆ.

A· தெய்வ சபையிலிருந்து கதண்டுகளை வரவழைத்து

B· ஆ.

A· திலெம்பேருனை உக்கார வெச்சுட்டா.

B· ஆ.

A· ஒரு புடுங்குலை அப்பழயை செத்துப்போகோனு. ஒரு பிராணி கிட்டெ அண்ட முடியாது.

B· செரி.

A· கதண்டுகளும் வண்டுகளும்

B· ஆ.

A· வந்து காவலிருக்குதுங்கை...

B· இருக்குதுங்கை...

A· "அடே, கருப்புத்தஐயாறி!

B· ஆ.

A· உன்னுடைய வீட்டுக்குப் போன்னு சொல்லிப்போட்டு"

B· ஆ.

A· ஆறுபேர் சேவுகரைக் கூப்பிட்டு

B· ஆ.

A· பருவதியா, வாளவந்தி நாடு வெட்டு
பொன்னிவள நாடு வர்றா...

B· நாடு வர்றா...

பாட்டு:-

A· அடா அன்னன் ஞன்னே னன்ஞன்ன னினன்ன
ஞன்ன ஞன்னே

B· ஞனே னன்ஞ

A· அன்ஞ ஞன ஞனே னன்ஞன்னெ ஞன்ன
னன்ன ஞனே ஞனன் னன்ஞ

B· அடா அன்னன் ஞன்னே ஞனே னன்னே
ஞனே ஞனன் னன்னே

A· ஞன்னே ஞனன் னன்னே

B· அடே ஞன்ன ஞன்னே

A· ஞன்னே ஞன்னை னன்னே

B· அடே ஞன ஞன்னே ஞனே னன்னே ஞன்னே
ஞஞன்னே ஞனே னன்ஞ

A· அவ வாளவைந்தி நாகேவெட்டு அவோ
நாகவெட்டு

B· - வெட்டு நாகேவெட்டு

A· அங்கே நாகவெட்டு

B· நாகேவெட்டு

A· இனி பொன்னிவள நாகு வர்றா அங்கே
அன்னக்கொடி பத்தினியா

B· அவ வாளவந்தி நாகேவெட்டு
சாமி நாகவெட்டு

A – வெட்டு நாகவெட்டு

B· அங்கே நாகேவெட்டு

A – வெட்டு நாகேவெட்டு

B· ~~அங்கே~~ அவ பொன்னிவள நாகு நாகே வறான் சாமி
பாரிவில்லி சேவகனை

A· அங்கே பத்தினியா முன் நடக்க
அங்கே முன் நடக்க

B· முன் நடக்க

A· ஆங்கே ஆறுமுகம் பின் நடந்தார் அங்கே
பின் நடந்தா(ன்) பின் நடந்தா(ன்)

B· அடா ஆண்டவனர் முன் நடக்க சாமி முன் நடக்க

A – நடக்க முன் நடக்க

B· அடே முன் நடக்க

A – நடக்க முன் நடக்கோ

B· அட ஆறுமுகம் பின்தொடர்ந்து சாமி
வருகினை வருகினை

A· அங்கே ஓங்கி வளர்ந்த தொகு அங்கே
வளர்ந்த தொகு

B· வளர்ந்த தொகு

A· அங்கே மூங்கில் வன சோலைவிட்டா அங்கே
அன்னக்கொடி பத்தினியா

about 1 min. and 40 sec.

B. அடா மேகெண்டா மெல்ல நடை சாமி
மெல்ல நடை

A – நடை மெல்ல நடை

B. அட மெல்ல நடை

A. மெல்ல நடை மெல்ல நடை

↑ B. அங்கே பள்ளங்கண்டா பதுத்த நடை சாமி
வருகின்றாரே மந்திரா

A. பொன்னிவள நாடு வந்து சேர்ந்தாரே அந்நேர...

B. அந்நேரம்...

A. உச்சி உருவ மத்தியான நேரம் வந்து,

B. ஆ.

A. அரண்மனைக்கி வந்து

B. ஆ.

A. உக்காந்தா பத்தினியா...

B. பத்தினியா...

A. தன்னுடைய ராஜதுரை சோழமறை மணிவேந்தன்
பெண்மொழிக்காரர் பேசாந்திருமுழயா...

B. திருமுழயா...

A. ஆனால் அவர் கலியாணஞ் செய்து நாப்பத்தஞ்சு
வருஷமாகுது.

B. ஆ.

A. ஒரு நாளாவது கனவிலை அந்த. அதாவது தன்னுடைய

B. ஆ.

A. மனைவியை விட்டுப் பிரிந்ததில்லை.

B. ஆ.

A. அந்த இரண்டு நாளாக

B. ஆ.

A. அழக்கழ வந்து கேட்டுக்கிட்டிருக்காரு.

B. ஆ.

A. "பருவதியா வந்துட்டாளா? அறமாதர்களே!"
"சாமி, கின்ன வல்லீங்க." இப்படி சொல்லிக்கிட்டிருக்காங்க.
ஒருமணிக்கி ஒருநேரம் வந்து கேக்கறது.

B. ஆ.

A. கேட்டுக்கிட்டிருக்கறபோது

B. ஆ.

A. பருவதியா போயி,

B. ஆ.

A. கிளப்பிறதுலே, ரேணிபட்டக சாமியால் மேக்கெ தலையெ வைத்து, கிழக்கெ காலெ நீட்டி நிறையாப் போர்த்தி படுத்தாளே பத்தினியா...

B. பத்தினியா...

A. அரைமணி நேரமிருந்து சாமிவந்து,

B. ஆ.

A. அங்கெ வாய்பேசாத்தருமர் மகெச் சாமி புண்ணியெ...

B. புண்ணியரா...

A. "இப்பி பருவதியா வந்திட்டாளா?"
"சாமி, வந்திட்டாங்க."

B. ஆ.

A. ஏனெ கொஞ்ச கிளம்புந்தவெப்புமா இருக்கிறன்னு

B. ஆ.

A. ரேணி பட்டக சாமியால் போயி

B. ஆ.

A. படுத்திருக்காங்க சாமீன்னு"

B. ஆ.

A. சொல்லியெட்டா மாதர்களு...

B. மாதவே...

A. சாமி எந்திருச்சுப் போயிப் பார்க்கறபோது,

B. ஆ.

A. திரேகமெ தெரியாமல்

B. ஆ.

A. ஸ்ரேப் படுத்திருப்பதை

B. ஆ.

A. சாமி கண்ணிலெ பார்த்து

B. ஆ.

A. அருகிலெ நின்னுரெ...

"பெண்ணே! என்ன வடக்கெ வாளவந்திநாடுபோயி, பிறந்தவெ, நல்லா இஷ்டம்போலெ பலகாரமும், பார்த்தா ஒன்னுஞ்சொல்ல போட்டுட்டாடு போலிருக்குது இஷ்டம்போலெ சாப்பாடு,

B. ஆ.

A. அவ்வளவொடு உனக்கு ஒரு கஷ்டமில்லாமெ.

B. ஆ.

A. ஏனோ, நெறையா மூத படுத்துக்கிட்டியே?"

B. ஆ.

A. "நாதா, வந்து வெய்யக் கொப்பளமும், எனக்கு திமிப்பும், தவைப்பும்.

B. ஆ.

A. அதனாலெ சாமி சற்று நேர படுத்திருக்கறனுங்."

B. செரி.

A. "அதெல்லாந்தெரியி, ஏம்பெண்ணே, நெறையா திரேகமே தெரியாமெ மூடிப் படுத்துக்கிட்டியெ, எங்கே உன்னுடைய திரேகத்தெ நீக்கு நான் பாக்கறெ?"

காந்தெரி,

B. ஆ.

A. "சாமி, அவ்வளவும் வெய்யக் கொப்பளம். சங்கம் பழம் போலிருக்கிது நான் நீக்க முடியாது". ன்னு சொல்லியிட்டா பத்தினியா...

B. பத்தினியா...

A. "பெண்ணே! சங்கம்பழ கொப்பளமெல்லா எனக்குந் தெரியி. ஏது, நீ, அங்கெ ஒழுங்கா இருந்திருந்தா

இன்னைக்கிருந்திட்டு நாளைக்கி வந்திருப்பெ. நெத்துப் போயிட்டு இன்னைக்கி வந்ததுனலெ, திரேகத்தை நீக்கு நாம்பாக்கறமின்னு சொல்லறபோது, பகுவதியா அப்பழயெ படுத்து இருந்தாளெ....

B. இருந்தாளெ...

A. சாமி, மள மளன்னு

B. ஆ.

A. மேல் துயிலெ எடுத்து, விலக்கி

B. ஆ.

A. கண்ணிலெ பார்த்திட்டாரெ...

B. பார்த்திட்டாரெ...

A. சாஞ்சமெழி புழச்சுகுருந்தங்க வெள்ளான் தன்ரசு
கோணெ மெழி புடேச்சுகுருங் கொங்க வெள்ளாந் தன்ரசு

B. தன்ரசு...

A. பெண்மெழிக்காரம் பேசாந்திருமுடியார்...

B. ஆ.

A. மேல்ச் சீலையெ விலக்கிப் பார்க்கறபோது

B. ஆ.

A. அடடா!

B. ஆ.

A. அங்கெ ரத்தம் பெருகுது ரத்த வெள்ளஞ் சாஞ்சு
உதிரம் பெருகி உதிர வெள்ளஞ் சாஞ்சுதங்கெ...

B. சாஞ்சுதங்கெ...

A. திரேகம் அவ்வளவும் கன்னிப் போயிருக்கிறதைக் கண்ணிலெ பார்த்து

B. ஆ.

A. "சண்டாளி!

B. ஆ.

A. சதிகாரி! கொலைகாரி!

B. ஆ.

A. நா, வேண்டா"ன்னு சொன்னனே,
அங்கெ போனா உன்னெ செரியான கெதி நடத்திப்-
போடுவான்னு. நா, என்னதான் செய்யறது...

B. செய்யறது...

A. என்னுடைய சொல்லெத் தடுத்துப்போயி நீ, என்ன கெதி
ஆனயடி...

B. ஆனயடி...

A. சண்டாளன்! சதிகாரன்! கொலைகாரன்!
அஞ்சுமணிச் சாட்டைலடிச்சு ஆறுமணிச்சாட்டைலடிச்சு
சாட்டை துணிருப்பட்டு சரீரமெ ரத்தமடி...

B. ரத்தமடி...

A. சண்டாளி! வாளவந்தி நாட்டுக்கு பொன்னிவள நாட்டுக்கு

B. ஆ.

A. பிறந்தவன் வீட்டுக்கு விருந்தாடப் போயி

B. ஆ.

A. செருப்படி தின்னு போயிட்டான்னு,

B. ஆ.

A. எனக்குப் பேரு உண்டு பண்ணி வெச்சுட்டே.
ஒரு நிமிஷ என்னுடைய அரமனெலெ நீ இருக்கக்கூடாது.
இப்பவே நீ வெளியெ நடந்தரேனும். ஒரு நிமிச
இருக்கக் "கூடாதுன்னு

B. ஆ.

A. முழவும் சொல்லுகிறேர்...

B. சொல்லுகிறேர்...

A. என்னுடைய வார்த்தையெ மீறிப்போயி நீ செருப்படி தின்னுட்டு
வந்ததுனாலெ, அந்த ~~நி~~ நிமிசமேர அரமனெலாகாது.

B. ஆ.

A· இப்பவே அப்போயரோணுமின்னு

B· அ.

A· முடிவாக சொல்லியட்டார்...

B- சொல்லிவிட்டா...

A. சாமி எந்திருச்சுப் போயி,

B. அ.

A· ஏரணி பட்டக சாமியெ வெட்டு

B· அ.

A· படுத்து உறங்கும் பண்ணுங்கச் சாவாடிக்கிப் போயி பஞ்சன மெத்தையிலெ

B· அ.

A· படுத்து நித்திரை செய்யுறாரு...

B. செய்யிறாரு...

A· காராளன் ஆவி கன்னிப்பட்டந்தப்பாது (பிள்ளை மலநா ஓபதித்த?) சந்தனமு...

B· சந்தனமு...

A· எஞ்சாமியெ சொல்றதுக்கில்லை நாஞ்செய்தது சேரியான, தப்பான காரியமாப் போச்சு.

B- அ.

A· ஆனால், நாம இனிமேல் சாமி அரமனைலெ அஞ்சு நிமிசம் அகாதின்னுட்டார்.

B· அ.

A· இந்த உயிர் பிராணனை நாம வெச்சிருக்கப்படாது.

B· அ.

A· எப்படியோ மடிச்சுப்போடோணுமின்னு பலவேதியா மனதிலெ எண்ணி மேலெ எழுந்து

B· அ.

A· வந்ததும், "அடே பாரிவெல்லச் சேவுகா!

B· அ.

A· சீக்கிரம் இங்கெவா !

B· ம்

A· தங்கவள நாட்லெ போயி

B· ஆ.

A· அயரேட்டுக் கொத்தரிருக்கருங்க

B· ஆ.

A· கூட்டிக் கொண்டு வாமேடா ...

B· வாரேமடா ...

A· பண்ணண்டு பாராச் செலுகனுமு

B· ஆ.

பாட்டு:-

about 55 sec.

A· அப்படியே என்னுத்தா நல்லதென்று

B· நல்லதென்று

A· அப்படியே எஞ்சாமி நல்லதென்று

B· நல்லதென்று

A· அன்புடனே எஞ்சாமி வருகுறேனே

B· அடாடா அப்படியே அண்ணங்கெ நல்லதென்று

A· போடநா சாமி

B· நல்லதென்று

A· ஆமட சாமி

B· அச்சிலைமெ அங்கெ வருகிறனே

A· ஏ பொன்னிவள என்னுத்தா நாடுவெட்டு

B· நாடுவெட்டு

A· பொன்னிவள அடாடா நாடுவெட்டு

B· நாடுவெட்டு

A· தங்கவள எஞ்சாமி நாடு வர்றா(ன்)

B· பொன்னிவள அண்ணங்கெ நாடுவெட்டு

A· நாடுவெட்டு

B. நாடு வெட்டு

A. நாடு வெட்டு

B. இப்ப தங்கவள எஞ்சாமி நாடு வாராங்கோ

A. ஏ ஆளைக்கண்டா எஞ்ஞாத்தா அன்னநடை

B. அன்னநடை

A. ஆள் மறைஞ்சா எஞ்சாமி குதிரை வேகம்

B. அங்கை இண்டோட்ட அண்ணை குதிரை வேகம்

A. குதிரை வேகம்

B. குதிரை வேகம்

A. குதிரை வேகம்

B. குதித்தோடி அண்ணை வருகினை

A. உச்சி உருவ மத்தியான நேரம் தங்கவள நாடு வந்து

B. ஆ.

A. சேர்ந்தாரே சேவுகரு....

B. சேவுகரே...

A. "யாரப்பா கொத்தகே?"

B. ஆ.

A. "ஏன் சாமி?" "பொன்னிவள நாட்லை பெரியூட்டு ஆத்தா,

B. ஆ.

A. ஆயர உனட்டுக் கொத்தரையாம் சீக்கிரம்

B. ஆ.

A. வரச் சொன்னார்."

B. ஆ.

A. சொல்லியாட்டார் சேவுகரு...

B. சேவுகரு...

A. அடே, காளிப்பா! மொட்டைனு! சின்னனு! பெரீண்ணு!
குப்பனு! கோயிந்தப்பா!

B. ஆ.

A. அந்தா எதோ ஆறுமாத்த கஞ்சிக்கி பாதகமில்லெ.

B. ஆ.

A. நம்முளுக்கெதோ வேலை குடுப்பாங்க அங்கெ விட்டு
ருக்காங்கன்னு

B. ஆ.

A. சாப்பிட்டுப் போட்டு சாமானங் கொண்டுக்கிட்டு

B. ஆ.

பாட்டு:-

A. அட அன்னன்னன்னெ னன்னன்னெ னன்னன்னு
னனன் னன்னே

B. —ன்னே னனே னன்னே

A. அன்னு னன னனே னன்னன்னெ னன்ன
னன்னன் னன்னே னனன் னன்னு

B. அடா தங்கவள நாடு விட்டு சாமி நாடுவிட்டு

A — விட்டு நாடுவிட்டு

B. அடா நாடுவிட்டு

A. நாடுவிட்டு நாடுவிட்டு

B. அங்கெ தார் வேந்தன் வடுகிளனே சாமி
பொன்னிவள நாடு தேடி

A. அங்கெ கிஞ்சீ வனங்கடந்தானங்கெ
வனங்கடந்தா வனங்கடந்தா

B. வனங்கடந்தான்

A. அங்கெ எழுமச்சங்கா பொய்கைவிட்டானங்கெ
பொய்கை விட்டான் பொய்கை விட்டான்

B. அடா காடான காடுவெட்டான் சாமி
காடுவெட்டான்

A.- வெட்டான் காடுவெட்டா(ன்)

B. அடே காடுவெட்டா(ன்)

A. — வெட்டா(ன்) காடுவெட்டா(ன்)

B. அவே கட்டப்பொன்னி சோலைவெட்டு நல்ல
வருகிறனே கொத்துதே

A. அந்த மஞ்சள் மணக்குவனம் அது
மணக்குவனம்

B. மணக்கு வன

A. இப்போ மாதுளங்கா காக்கிவனம் அங்கே
தாண்டி வருகிறனே

B. அடா தெண்டோட்டம் திரை வேகம் சாமி
திரை வேகம்

A — வேகம் திரை வேக(ம்)

B. அடா திரை வேக

A.— வேகம் திரை வேகோ

B. அங்கே தித்தோழ வருகிறனே சாமீ
கொத்துதோ தாண்டாமல்ல

about 1 min. and 14 sec. ↑

A. மண் போட்டு பொன்விளைய மகுட பொன்னி வளநாடு வந்து

B. ஆ.

A. அரண்மனையில்,

B. ஆ.

A. மணி மண்டபத்து வாசல்

B. ஆ.

A. நின்றரே அந்நேரா...

B. அந்நேர(ம்)...

A. பனிரண்டு பாராச் சேவுகரு அரமனைக்குள்ளாகப் போகும்போது,
"அடே, சேவுகரே!

B. ஆ.

A. கொத்தருகே வந்துட்டாங்களா?"

B. ஆ.

A. "அத்தா வந்து வெளிமுகத்திலெ நிக்கிறாங்"கன்னு
சொல்லவும்

B. ஆ.

A. பகவதியாள்,

B. ஆ.

A. ஏழாயிரம் பொன் பட்டுத் துயிலை உடுத்தி வாரவழிய
முக்காடிட்டு,

B. ஆ.

A. அன்ன நடை நடந்து ஆபரணந்தானசைய...

B. தானசைய...

A. பத்தினி வர்ரதைக் கண்டு

B. ஆ. (ஆயர?)

A. ஆறு கொத்தர் கண்டும்

B. ஆ.

A. பாதம் பணிந்து பணிவிடைகள் செய்தாரே...

B. செய்தானே--

A. "அப்பா, கொத்தர்களே!

B. ஆ.

A. சரணமென்ற பேர்களுக்கு வரணமொரு நாளுமில்லே..."

B. நாளுமில்லே...

A. "ராதாங்கத்திலெ ஆள் வந்துதிங்க.
எங்கிருக்கு என்ன வேலை உத்தரவாகுதோ சாமி."
"அப்பா!

B. ஆ.

A· கலியாணஞ் செய்து நாப்பந்தஞ்சு வருஷமாகுது

B· ஆ·

A· நம்முனைக்கு குழந்தையில்லை.

B· ஆ·

A· ஆனதாலே

B· ஆ·

A· வடக்கை வாளவந்தி நாடு பிறந்தவன் வீட்டுக்குப் போக, அங்கே

B· ஆ·

A· அநேகமான நிமிசெல்லா நடந்து போயிட்டுது.

B· ஆ·

A· எஞ்சாமி நாதர் வாய்பேசாத் தும்மர் மகைச் சாமி புண்ணியர்

B· ஆ·

A· அஞ்சு நிமிச நிய்யா அரமனைலெ ஆகாது.

B· ஆ·

A· எங்கயோ ஒழிப்போண்ணு சொல்லிட்டார்.

B· ஆ·

A· நானின்னி எங்கு போறதப்பா? இந்த உயிர் பிராணனை வெச்சிருக்கப் படாது.

மண்ணை பருந்த மதுக்கரைச் செல்லாத்தா

எல்லை பருந்த எது நாடுதீர்த்த காணிவெட்டி

கல்லுவெட்டி தீர்ந்த கருத்துள்ள செல்லாத்தா...

B· செல்லாத்தா···

A· அவருடைய கோயிலுக்கு முன்பு

B· ஆ·

A· அந்த,

B· ஆ·

A. கோயிலுக்கு முன்பாக

B. ஆ.

A. எனக்கு அறுபதடி சதிரம்

B. ஆ.

A. கட்டி, அறுபதடி, அறுபதுபடி வெச்சு, அறுபதடி சதுரங்-
கட்டோணு நீங்க.

B. ஆ.

A. கட்டி,

B. ஆ.

A. எட்டு நாளைக்குள்ளாக வேலையை முடிக்கோணும்.

B. ஆ.

A. அந்தச் சதுர. அறுபதடி மேலை நான் மேலேறி

B. ஆ.

A. கீழை விழுந்து இறந்து போயிரோணும்.

B. ஆ.

A. இனிமேல் இந்த உயிர் பிராணனை வெச்சிருக்க
முடியாதுன்னு"

B. ஆ.

A. சொல்லியிட்டா பத்தினியா...

B. பத்தினியா...

A. "ஆனால், எட்டு நாளைக்குள்ளாக

B. ஆ.

A. எனக்கு முடிவாகிடணும்" அப்பிடீன்னுட்டாரு.

B. சரி.

A. "நல்லதுங்க ராஜாவே..."

B. ராஜாவே...

A. "குப்பி, வாடி இங்கே!

B. ஆ.

A. ஒருவெள்ள முத்தளந்தாந்து வெத்தலெ பாக்குலெ வெச்சு, கொத்துவுக்கு குடுத்துடுன்னு" சொல்லவுடு,

B. ஆ.

A. அஞ்சணகாரி அலமேலுங் குப்பி செடி

B. ஆ.

A. ஒருவெள்ள முத்தளந்தாந்து, கொத்துவுக்கு தாம்பூலம் கொடுத்தாளே...

B. கொடுத்தாளே...

A. "கொத்தர்களே! இன்னிக்கே

B. ஆ.

A. சாகுறவங்கக்கு என்ன நாளிருக்குது?

B. செரி.

A. இன்னிக்கே கல்லொடச்சு,

B. ஆ.

A. எட்டு நாளுக்குள்ளாக நீ வேலையை

B. ஆ.

A. சரியா முடிக்கோணு...

B. முடிக்கோணுமே...

A. அறுபது படி வெச்சுக் கட்டோணு.

B. ஆ.

A. அறுபதடி ஒசர சதுரத்திலிருந்து

B. ஆ.

A. நான் கீழெ வுழுந்து,

B. ஆ.